SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

018

## THIRD YEAR EXAMINATIONS IN BACHILOR OF ARTS (EXTERNAL)-2011/2012

HELD IN NOVEMBER / DECEMBER-2013

## TML 3.21 இலக்கியக் கொள்கையும் இலக்கியத் திறனாய்வும் (LITERARY THEORY AND LITERARY CRITICISM)

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : மூன்று மணித்தியாலங்கள்

---

### பகுதி I

01. (அ) மரபு வழி இலக்கியக் கொள்கைகள் யாவை?

(05 புள்ளிகள்)

(ஆ) அவற்றுள் ஒன்று பற்றி விமர்சன ரீதியாக கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

02. (அ) நவீன இலக்கியக் கோட்பாடுகள் யாவை?

(05 புள்ளிகள்)

(ஆ) சமகால இலக்கியங்களில் அவை எந்தளவு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது பற்றி கருத்துரைக்குக.

(15 புள்ளிகள்)

03. (அ) பெண்ணியக் கோட்பாடு என்றால் யாது?

(08 புள்ளிகள்)

(ஆ) அதனை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் குறித்து விமர்சன ரீதியாகக் கருத்துரைக்குக.

(12 புள்ளிகள்)

### பகுதி II

04. (அ) திறனாய்வின் போது கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்கள் யாவை?

(05 புள்ளிகள்)

(ஆ) அவ்வம்சங்கள் ஒவ்வொன்றினதும் முக்கியத்துவம் குறித்து விரிவாக விபரிக்குக.

(15 புள்ளிகள்)

05. ‘தரமற்ற படைப்புகளும் ஆள்நிலை முக்கியத்துவமும்’ குறித்து, தரமும் சிறப்புமிக்கதாக பேசப்படும் இன்றைய விமர்சனங்கள் பற்றிய உமது கருத்துக்களை தக்க எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைக்குக.

(20 புள்ளிகள்)

06. மேல்வரும் எவையேனும் இரண்டு குறித்து விமர்சனத்தோடு தொடர்புபடுத்தி விரிவாகக் கருத்துரைக்குக.

இணைய வழி இலக்கிய வாசிப்புக்கள்

கவிதையை நயத்தல்

பேராசிரியர் கா. சிவத்தம்பி

எம்.ஏ. நு.்மானின் திறனாய்வுக் கட்டுரைகள்

(2 X 10 = 20புள்ளிகள்)

## பகுதி III

07. கீழ்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

வீழ்ச்சி

காய்ந்த சருகு போல் ஒரு மண்புழு
ஊர்ந்து கொண்டிருந்தது படியோரம்
நான் மனிதன் என்ற இரக்கம் மீதூர
அதனை பார்த்துவிட்டுப் போனேன் ஒரு கணம்
சுர் என்று சருகு இரைதல் போல் கேட்டது,
திரும்பிப் பார்த்தேன்-
மண்புழு வாசலில் நின்றது…
வாயை திறந்தது கூரிய பல் தெரிய.
நாக்கு எங்கே என நினைக்கையில்
நாக்கிலிருந்து தீச்சுவாலை பறந்தது
மண்புழுவுக்கு பல் ஏது? நாக்கு ஏது?
நினைக்கையில் தெரிந்தது மண்புழு உருமாறி விட்டதென்று.

எனினும் அஞ்சவில்லை.

குனிந்தேன் தடி எடுக்க.

நிமிரும் போது

மண்புழுவின் கையில் துப்பாக்கி இருந்தது.

அல்ல,

ஒரு பாம்பின் கைத் துப்பாக்கி

அதுவும் அல்ல,

ஒரு சிப்பாயின் கைத் துப்பாக்கி.

நான் குனிந்து,

பாம்பாய் நெளிந்து

காய்ந்த சருகின் மண்புழு ஆகி

ஊர்ந்து கொண்டிருக்கின்றேன் படியோரம்.

(20 புள்ளிகள்)

08. கீழ்வரும் உரைப்பகுதியைத் திறனாய்வு செய்க.

செய்வினைச் சீனி சரியாக மரவள்ளிக்கிழங்கு சாப்பிடுகிறவன். மரவள்ளிக்கிழங்கை எங்கள் பகுதியில் 'டொபி" என்றும் அழைப்பதுண்டு. அது ஏனென்று எனக்குத் தெரியாது. நல்ல கிழங்குகள் வடிவாக அவிந்து ஒருவகைப் பிசுபிசுப்போடு விரிந்திருப்பதால் அப்பெயர் வந்திருக்கலாம்.

நான் முன்னரே சொல்லியிருக்கிறேன், பெயர் வைப்பதில் நிபுணரானவர்கள் இந்தப் பிரதேசத்தில் அதிகம் பேர் என்று. அவர்கள் மரவள்ளிக்கிழங்கையும் விட்டு வைக்கவில்லை போலும்! ஆனால், அதனைக் கடதாசியில் நான் இன்னும் காணவில்லை.

"பஞ்சம் தாங்கி", என்றும் இன்னொரு சாரார் அழைப்பார்கள். மாரிக்காலம் வந்து – கடற்கரையும் படுத்து, வேளாண்மையும் அவிந்து விட்டால், ஊரில் ஏற்படும் பஞ்சத்திற்கு நின்று பிடிப்பது இந்த மரவள்ளிக்கிழங்கும் பாணும்தான். இதனால் இந்தப் பெயர் மரவள்ளிக்கிழங்கிற்கு

வந்திருக்க வேண்டும். பாண் இன்று தனவந்தர்களின் உணவு. அவர்களின் நோய்க்கு மருந்தே அதுதான்.

இன்றும் எங்கள் ஊரில் மரவள்ளிக்கிழங்கு தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டுதான் இருக்கிறது. மாலை பட்டால் ஒரு வீதிக்கு நாலு என்ற எண்ணிக்கையில் மரவள்ளிக்கிழங்கும் மாட்டுக் குடலும் பொரித்து விற்கின்ற குட்டிக்கடைகள் ஏராளம் உள்ளன. இந்தக் கடைகளுக்கு எதிர்க்கடை போலத் தான் நமது வைத்திய வியாபாரிகளின் மருந்துக் கடைகளும்.

இன்று பலசரக்குக் கல்வியும் மருந்துகளும்தான். இந்த இரண்டும்தான் ஊரில் வணிகப் பொருட்கள். மக்களின் வரிப் பணத்தில் படித்து வெளியான வைத்தியனுக்கும் ஆசிரியனுக்கும் மக்களுக்கு இலவசமாகச் சேவைகளை வழங்க விருப்பமில்லை.

பாடசாலைக்குப் போனால் ஆசிரியனின் தொண்டை அடைத்துவிடுகிறது. தன் கடைக்கு வந்தால்தான் அவன் அடிக்குடலும் விரிகிறது. இதே போன்றுதான் வைத்தியனும். வைத்தியசாலையில் அவன் குழல் வைப்பதென்றால் ஏதோ பாம்பைக் கையால் பிடிப்பதைப் போல வெறுப்படைந்து கொள்கிறான். இவனும் தன் கடைக்கு வந்தால்தான் அதைத் 'தேன் குழலைத்' தடவுவதைப்போலத் தடவிப் பார்க்கிறான்.

எங்களூரில் கிழங்கு பொரிப்பவனுக்கும் வைத்தியனுக்கும் ஒரே அந்தஸ்துதான். இவனும் ஓர் இரவுக்கு ரூபா இரண்டாயிரம்வரை சம்பாதிக்கிறான். அவனும் ஓர் இரவுக்கு ரூபா இரண்டாயிரம்வரை உழைக்கிறான். இவனது கடைக்குள்ளும் மாலையானதும் மக்கள் 'வாங்குகளில்' காத்துக்கிடக்கிறார்கள். அவனது கடைக்குள்ளும் மக்கள் மாலைகளில் காத்துக்கிடக்கிறார்கள். இந்த இரண்டு கடைகளுக்குமுள்ள ஒரே ஒரு வித்தியாசம், வைத்தியனின் கடையின் பெயர்ப் பலகையில் ஒரு 'சிகப்புப் புள்ளடி' அவ்வளவுதான். மற்றும் படிக்கு வேறொன்றுமில்லை. இருவருமே 'சூப்பும்' விற்கிறார்கள்."

கிளிலாத்தாவைப் பார்த்தால் எப்போதும் மரவள்ளிக்கிழங்கு அவிக்கின்ற பானை ஒன்றைப் புறவளவில் நின்று குட்டித் தென்னைக்கு அடியில் இருக்கும் முண்டுக்கல் அடுப்பில் வைத்து அடிக்குடல் வெளிவர ஊதிக்கொண்டிருப்பா. கண்கள் சிவந்து அவற்றாலும் புகை வந்தபடி இருக்கும். இதற்குத்தானோ என்னவோ கிளிலாத்தாவுக்குத் தென்னம்பாளை, பூக்கான் என்றால் புதுமாப்பிள்ளையைக் கண்ட பிரியம். அடுப்பில் அவைகள் நன்றாக நின்று எரியக்கூடியவைகள் அல்லவா!

(20 புள்ளிகள்)